**<u>தேதி:-20-12-2021 E.O.P.No.55/2020 ம.சா.1 (ஜெயலெட்சுமி)</u>**

**<u>4 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:-</u>**

பொதுவாக ஒரு வேட்பாளர் ஒரு தொகுதியில் ஏற்கனவே தேரந்தெடுககப்பட்டு நல்லமுறையில் பணியாற்றி இருந்தால் தான் அடுத்த முறை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவருக்கு அதிக வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கில் 4 ஆம் எதிர்மனுதாரர் மறுப்புரையில் கூறியுள்ள சங்கதிகள் பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய வழக்கறிஞர் மூலம் நான் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. வையூர் கிராமத்தில் 2011 ஆம் ஆண்டு பஞ்சாயத்து எலக்சன் நடந்தது என்றால் சரிதான். குருவம்மாள், கணவர் பெயர் பாண்டி எனது மாமியார் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டு தேர்தலில் மேற்படி என்னுடைய மாமியார் போட்டியிட்டார். 2011 ஆம் ஆண்டு தேர்தலில் இந்த வழக்கு 4 ஆம் எதிர்மனுதாரரும் போட்டியிட்டார் என்றால் சரிதான். அந்த தேர்தலில் 4 ஆம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றார் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டு முதல் எங்கள் ஊருக்கு சாலைவசதி, நல்லதண்ணீர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு சுடுகாடு வசதி ஆகியவை வந்தது என்றால் சரிதான். 2016 ஆம் ஆண்டு முந்தையதலைவரின் பதவிக்காலம் முடிந்த பின்னர் தனிஅலுவலரின் நிர்வாகத்தில் பஞ்சாயத்து இருந்தது. 2016 ஆம் ஆணடு 4 ஆம் எதிர்மனுதாரரின் பதவிக்காலம் முடிந்ததால் அவருடைய பொறுப்பில் இருந்து விலகிவிட்டார் என்றால் சரிதான். 2019 ஆம் ஆண்டு தேர்தல் நடத்துவது சம்பந்தமாக நாளிதழில் செய்திகள் வந்த பின்னர் நானும் தேர்தலில் நிற்க முயற்சி செய்தேன். தேர்தலில் நிற்பதற்கு நானும் மனு செய்தேன். 4 ஆம் எதிர்மனுதாரரும் அதே போன்று மனு செய்தார். 4 ஆம் எதிர்மனுதாரருக்கு பூட்டுசாவி சின்னம் ஒதுக்கப்பட்டது. 30.12.2019 ஆம் தேதி வாக்குப்பதிவு முடிந்து வாக்குஎண்ணிக்கைக்காக 02.01.2020 ஆம் தேதி உத்தரவிடப்பட்டிருந்தது. இதே கோரிக்கை சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் நான் நீதிப்பேராணை மனு எண் 346/2020 தாக்கல் செய்தேன். அந்த நீதிப்பேராணையில்வாக்கு எண்ணிக்கையில் தவறு நடந்துள்ளது என்றும், மறுஎண்ணிக்கை செய்ய

வேண்டும் என்றும் 4 ஆம் எதிர்மனுதாரரை தேர்ந்தெடுத்தது செல்லாது என்றும் கூறியிருந்தேன். அந்த மனு உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்குத் தெரியவில்லை வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். 2011 ஆம் ஆண்டு தேர்தலில் என் மாமியார் தோல்வி அடைந்ததாலும், 2019 ஆம் ஆண்டு தேர்தலில் நர்ன் தோல்வி அடைந்ததாலும் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழகககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சேகர் மற்றும் நாகராஜ் ஆகியோர் மீது நான் புகார் கொடுத்தது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுவில் நான் கூறியுள்ள சங்கதிகளும், ம.சா.ஆ.9 மனுவில் கூறியுள்ள சங்கதிகளும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 உள்ள ஆவணங்களுக்கும், இந்த வழக்கு சங்கதிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அதனடிப்படையில் நான் பரிகாரம் எதுவும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 4 ஆம் எதிர்மனுதாரர் ஏற்கனவே நல்லமுறையில் பணி செய்ததன் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் முறையாக போட்டியிட்டு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மனுவில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.